**வெலிகம நகர சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வெலிகம நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிடப் பட்டிருந்த ரூபா 1,394,978 தொகை சம்பளங்கள் மற்றும் வேதனங்களில் இருந்து கழித்திருக்கவில்லை. | சம்பளம் மற்றும் வேதனங்களின் சரியான முறையில் கணக்கீடு செய்ய வேண்டும் | சம்பளம் மற்றும் வேதனங்கள் செலவுகளின் பெறுமதி குறைவாக நிரூபணமாவதைத் தவிர்ப்பதற்காக சம்பளமற்ற விடுமுறைகளின் பெறுமதியை ஆண்டிற்கான அறவிடப்படக் கூடிய வருமானத் தலைப்புக்கு செலவு வைக்கப்பட்டது. |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 488,192 இற்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த வருட இறுதியில் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 237,126 தொகைக்கான இருப்பு மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க வில்லை. | இருப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்தத் தகவல் களை சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன் |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத் தொகை ரூபா 20,027,702 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காணப்படும் மீதிகள் இடையே, கூட்டுத் தொகை ரூபா 1,037,667 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 | ஒவ்வொரு ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டப் பதிவேடு சமப்படுத்தி பண்டப் பதிவேட்டில் காணப்படும் மீதியுடன் பௌதீக ரீதியாகக் காணப்படும் மீதியை சரியானவை என பரிசோதனை செய்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தவறுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் xii பந்தி 22.4 | சபை ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறை அறிக்கைகள் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,148,678 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,440,297 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 13,050,000 | 12,501,257 | 11,615,984 | 7,974,517 | 10,050,000 | 10,588,176 | 9,284,411 | 7,089,244 |
| வாடகை | 15,203,000 | 15,149,632 | 11,537,415 | 9,038,801 | 15,897,200 | 12,809,606 | 11,178,912 | 5,426,584 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 3,926,500 | 7,133,800 | 7,133,801 | 336,458 | 3,326,500 | 4,453,836 | 4,453,836 | 336,459 |
| ஏனைய வருமானங்கள் | 49,364,000 | 47,057,390 | 27,055,034 | 47,421,361 | 45,456,000 | 30,435,604 | 25,102,453 | 27,419,005 |
| மொத்தம் | 81,543,500 | 81,842,079 | 57,342,234 | 64,771,137 | 74,729,700 | 58,287,222 | 50,019,612 | 40,271,292 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 81,543,500 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 40,271,292 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 81,842,079 தொகை உடன் ரூபா 122,113,371 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 57,342,234 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 64,771,137 தொகை ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் 47 சதவீதமாகும் | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | வருமானத்தை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 6,743,278 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 8,744,916 தொகையான ஆண்டிற்கான சிட்டை யிடல் மற்றும் மிகை கட்டணத்துடன் ரூபா 15,488,194 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடு கள் ரூபா 7,832,400 தொகை ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதி யில் உள்ளவாறு ரூபா 7,655,788 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மொத்த அறவீடுகள் சிட்டையிடல் மற்றும் வருட இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை மீதியில் 50 சதவீதமாகும்.<br>நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 170(1) மற்றும் (2) இன் | நிலுவை வீதிவரி வருமானத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**(ஆ) களியாட்ட வரி**

| | | |
|---|---|---|
| நிலுவை களியாட்ட வரி ஆரம்ப மீதி ரூபா 345,965 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 185,918 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 213,135 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 318,748 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள், சிட்டையிடல் மற்றும் வருட ஆரம்ப நிலுவை மீதியில் 40 சதவீதம் அளவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை களியாட்ட வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **கடை வாடகை** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 2,596,617 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 5,363,767 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகை கட்டணத்துடன் ரூபா 7,960,384 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,593,001 தொகையாகக் காணப்பட்டமையினால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 5,367,383 தொகையான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மொத்த அறவீடுகள், சிட்டையிடல் மற்றும் வருட ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை மீதியில் 32 சதவீதமாகக் காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | கடை வாடகைகளை செலுத்தும் படி கடை வாடகையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 143,901 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 48,129,149 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கடிதத்தின் மூலம் விண்ணப்பித் துள்ளேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| ஆளணித் திட்டத்தில் அங்கீகரிக்கப் பட்ட பதவிகளில் காணப்பட்ட 10 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் | ஆரம்ப மற்றும் ஏனைய பதவிகளில் காணப்படும் வெற்றி டங்களை நிரப்புவதற்காக நடவடி க்கை எடுத்திருந்ததுடன் சிரேஷ்ட மற்றும் இரண்டாம் நிலை பதவிகளில் வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மே 16 திகதி நடத்தப்பட்ட திட்டமிடல் குழு தீர்மான இலக்கம் 1431 இன் மூலம் அங்கீகரிக்கப் பட்டிருந்த BA/23/2017 ஆம் இலக்கம் கொண்ட அங்கீகரிக்கப் பட்டிருந்த கட்டிட வரைபின் பிரகாரம் 326 சதுர மீற்றர்கள் | வர்த்தமானி யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | திட்டமிடல் குழு விதப்புரை மீது அறவிடப்பட வேண்டிய தண்டப் பணம் மற்றும் ஏனைய அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | அளவைக் கொண்ட 4 வாகனம் நிறுத்தி வைக்கும் இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்யாமையினால் 2009 ஏப்ரல் 17 திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 வீதம் ரூபா 2,000,000 தொகை அறவிடப்பட்டிருக்காததுடன் வர்த்த மானியின் 6(11) பந்தியின் பிரகாரம் கட்டட வரைபிற்கு இணங்காத வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுமார் 108 சதுர மீற்றர்கள் கொண்ட மூன்றாம் மாடிக்காக ரூபா 216,000 தொகை அறவீடு செய்து தழுவு அங்கீகாரம் வழங்கியிருக்க வில்லை. | | |
| (ஆ) | தாபனக் கோவையின் அத்தியாயம் XIX யின் பிரிவு 5.8 இன் பிரகாரம் நீர் மற்றும் மின்சாரம் வதியும் நபரினால் செலுத்தப்பட வேண்டும். எனினும் ஊழியர் வதியும் வீடொன்றிற்காக 2015 ஆகஸ்ட் 01 திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை ரூபா 203,293 இற்கான நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உத்தியோக பூர்வ வதிவிடத்திற் காக தனியாக மின்சாரம் மற்றும் நீர் மானிகள் பொருத்துவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2013 அக்தோபர் 25 ஆம் திகதிய 1834 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட துணை விதியின் பிரகாரம் காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் விதத்தில் உரிய கட்டணங்கள் கொடுப்பனவு மீது கழிவுப் பொருட்கள் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தென் மாகாண, உள்ளூராட்சி அமைச்சின் 2014 அக்தோபர் 28 திகதிய 1886/12 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மீதான துணை விதி 7.14 இன் பிரகாரம் குறிப்பிட்ட ஏற்பாடுகளை தழுவி இருந்த போதும் மீளாய்வாண்டின் போது 32 | துணை விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குப்பை வரி அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஹோட்டல்களின் குப்பை வரி திருத்தங்கள் செய்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 62 விடுதிகளின் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த போதிலும் 32 விடுதிகள் இருந்து மாத்திரம் குப்பை வரி அறவிடப்பட்டிருந்தது, | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து விடுதிகளில் இருந்தும் குப்பை வரி அறவிடப்பட வேண்டும். | குப்பை வரி அறவிட்படாத இடங்களுக்காக சேவைக் கட்டணத்தை அறிமுகப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/பபகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு முறை கடைகளின் வாடகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டு மெனினும் சபைக்குச் சொந்தமான 158 கடைகள் தொடர்பாக அவ்வாறு பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீட்டினை பெறுவதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஊ) | நகர சபைக்குச் சொந்தமான நவீன வர்த்தக தொடர் கட்டிடத்தின் 02 கடைகளில் இருந்து மற்றும் பஸ் நிலையத்தில் 04 கடைகளில் இருந்து ஒரே முறையில் பெரும் பணம் ரூபா 1,570,601 தொகை 2007 ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை விரைவாக அறவிட வேண்டும். | வாடகையாளர்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நகர சபைக்குச் சொந்தமான நகர மண்டபவம் விழாக்களுக்காக வாடகைக்கு கொடுக்கும் போது மண்டபக் கட்டணத்தை தவிர நீர், மின்சக்தி மற்றும் துப்பரவு செய்யும் கட்டணம் என்பவற்றிற்காக ஒரு சந்தர்ப்பத்திற்காக ரூபா 4,500 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டுமெனினும் திருமண விழா வைபவங்களின் போது இந்தக் கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் மீளாய் வாண்டின் போது 66 திருமண வைபவங்களுக்காக ரூபா 297,000 இற்கான தொகை ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை. | நீர், மின்சாரம் மற்றும் துப்பரவு செய்தல் என்பவற்றிற் காக சேவைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | திருமண வைபவங்களில் போது மண்டபக் கட்டணத்திற்கு பாதீட்டில் சேவைக் கட்டணமும் உட்படுத்தப்பட்டிருப்பதால் சேவைக் கட்டணம் தனியாக பெறப்படுவதில்லை. |

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபை நிதியத்தில் இருந்து சங்கானந்த முதலாம் ஒழுங்கை (படி வரிசை பாதை) பகுதியல் காணப்படும் பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்காக ரூபா 699,430 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த பக்கச் சுவர் பிரதான பாதைக்கு கணிசமான அளவு தூரத்தில் அமைந்துள்ள தனியார் காணி உரிமையாளர் ஒருவரின் காணி பாதுகாக்கப்படக் கூடிய விதத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள நிர்மாணவேலை ஒன்றாகும். | சபை நிதியம் பொது அலுவல் களுக்காக பயன்படுத்தப் பட வேண்டும். | எதிர்காலத்தில் சபையின் பிரேரணையின் மீது பாதை வாகனப் போக்குவரத்திற்கு பொருத்தமான விதத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | நகர மண்டபத்தின் மின்சாரச் செலவு மீளாய்வாண்டின் போது ரூபா 1,589,384 தொகையாகக் காணப்பட்ட போதிலும் மண்டபத்தை வாடகைக்கு எடுப்பவர்களில் மின்சாரம் மற்றும் துப்பரவு செய்யும் செலவுகளுக்காக அறவிடப்பட்டி ருந்த கட்டணம் ரூபா 858,000 தொகையாகக் காணப்பட்டது. | நகர மண்ட பத்திற்கு மின்சாரமானி பொருத்தப்பட வேண்டும். | நகர மண்டபம் மற்றும் சபை அலுவலகம் இரண்டிற்கு ஒரு மின்சாரமானி பொருத்தப்பட்டி ருந்ததாக வெவ்வேறான எண்ணிக்கையாகக் காட்ட முடியாது. |

## 3.4 செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கப்பரதொட சனசமூக நிலையத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 5,577,804 இற்கான தொகையொன்று 2018 செப்தெம்பர் 27 திகதி அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யவதற்காக கேள்வி அழைப்புக்காக ரூபா 52,000 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விடயங்கள் உரிய விதத்தில் திட்டமிடப்பட வேண்டும். | போதியளவு காலம் ஒன்று காணப்படாமையால் நிர்மாண வேலையை நிறைவேற்ற முடியவில்லை. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவு விடயங்களில் ரூபா 32,913,895 இற்கான சேமிப்பு காணப்பட்டது. அப்பெறுமதிகள் 3 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமான விதத்தில் வருடாந்தம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீடு மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே முரண்கள் குறைந்த மட்டத்தில் பேணுவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 05 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 9,936,983 தொகையாகக் காணப்பட்டதுடன் அப் பெறுமதிகள் 3.4 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமான விதத்தில் வருடாந்தம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீடு மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே முரண்கள் குறைந்த மட்டத்தில் பேணுவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளுராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை வினவி இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியுள்ளது. | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு தொடர்பான அலுவல்கள் உரிய நடைமுறையின் படி செயற்படுத்துவதற்காக எதிர்பார்ப்பதுடன் மாதாந்த உள்ளகக் கணக்காய்வு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |